# சிங்கப்பூர்வாழ் தமிழ்ப் பேராசிரியர் சுப.திண்ணப்பன் - முதல்வர் மு.க.ஸ்டாலின் சந்திப்பு!

## பொன்னாடை அணிவித்து, புத்தகம் வழங்கி சிறப்பு செய்தார் முதல்வர்!

சிங்கப்பூர், மே 27-

சிங்கப்பூர் வாழ் தமிழ்ப் பேராசிரியர் சுப.திண்ணப்பன் அவர்களை, தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சந்தித்துப் பேசினார்.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், சிங்கப்பூர் மற்றும் ஜப்பான் நாடுகளுக்கு அரசு முறைப் பயணம் மேற்கொண்டு, அந்நாடுகளுடன் தமிழ்நாட்டிற்கு உள்ள பொருளாதார மற்றும் வர்த்தக உறவுகளை மேம்படுத்தும் வகையிலும், உலக முதலீட்டாளர்கள் மாநாடு 2024க்கு அழைப்பு விடுக்கும் வகையிலும் மற்றும் தமிழ்நாட்டில் முதலீடுகள் மேற்கொள்ளும் நோக்கத்திலும், சிங்கப்பூர் மற்றும் ஜப்பான் நாடுகளுக்கு அரசு முறைப் பயணம் மேற்கொண்டுள்ளார்.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை, நேற்று (25.05.2023) சிங்கப்பூர் வாழ் தமிழர், தமிழ் பேராசிரியர் சுப.திண்ணப்பன் அவர்கள் மரியாதை நிமித்தம் சந்தித்துப் பேசினார்.

தமிழ்ப் பேராசிரியர் சுப. திண்ணப்பன் அவர்கள் சிவகங்கை மாவட்டத்தைச் சேர்ந்தவர் ஆவார். இவர் சிதம்பரம் அண்ணாமலைப் பல்கலைக்கழகம், அதிராம்பட்டினம் கல்லூரி, மலேசியா மற்றும் சிங்கப்பூர் நாடுகளின் பல்கலைக்கழகங்களில் பணியாற்றியுள்ளார்.

தமிழ்ப் பேராசிரியர் சுப. திண்ணப்பன் அவர்கள், கடந்த பல ஆண்டுகளாகச் சிங்கப்பூரில் தமிழ் மற்றும் மொழியியல் பேராசிரியராகப் பணியாற்றி உள்ளார்.

அங்கு தமிழ்மொழிப் பாடத்திட்டக்குழு, பாடநூல் உருவாக்கம் ஆகியவற்றிலும், கல்வி அமைச்சகத்தின் குழுக்களிலும் மிக முக்கியப் பங்காற்றி வருகிறார். இவர் ஆற்றிய தமிழ்ச்சேவைக்கு பல்வேறு நாடுகள் மற்றும் மாநிலங்களின் சார்பில் இருபதுக்கும் மேற்பட்ட விருதுகள் வழங்கப்பட்டுள்ளன.

சிங்கப்பூர் நாட்டின் முன்னாள் குடியரசுத்தலைவர் காலஞ்சென்ற பெருமதிப்பிற்குரிய எஸ்.ஆர்.நாதன் அவர்களுக்கு தமிழ் பயிற்றுவித்துள்ளார்.

முதலமைச்சர் அவர்களை சந்தித்த 88 வயதான முனைவர் சுப.திண்ணப்பன் அவர்களுக்கு, அவர் தமிழ்ச் சமுதாயத்திற்கு ஆற்றிய சேவைகளைப் பாராட்டி அவருக்கு முதலமைச்சர் அவர்கள் சால்வை அணிவித்து, புத்தகம் வழங்கி சிறப்பு செய்தார்.

முதலமைச்சர் அவர்களை சந்தித்த பிறகு செய்தியாளர்களிடம் பேசிய முனைவர் சுப.திண்ணப்பன் அவர்கள், "நான் தமிழ் படிக்க வேண்டும் என்ற ஆர்வம் பேரறிஞர் அண்ணா மற்றும் முத்தமிழறிஞர் கலைஞர் ஆகியோரால் தான் வந்தது. திருவாரூரில் நான் படித்துக் கொண்டு இருந்த போதுதான் முதன்முதலில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் பேச்சைக் கேட்டேன். அப்போதுதான் எனக்கு தமிழ் உணர்வு வந்தது, தமிழ் ஆசிரியராக வேண்டும், தமிழ் பேராசிரியராக வேண்டும் என்ற வேட்கை வந்தது.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்ற பிறகு தமிழகத்தின் முன்னேற்றத்திற்காக பல்வேறு புதிய திட்டங்களை அறிவித்துச் செயல்படுத்தி வருகிறார். குறிப்பாக பெண்களுக்கு இலவசப் பேருந்து பயணச் சலுகை, பெண்கள் கல்வி கற்று வாழ்வில் முன்னேற வேண்டும் என்பதற்காக பல்வேறு புதிய திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறார். அதுபோல மாணவர்களுக்கு காலை உணவுத் திட்டம் செயல்படுத்தி வருவது போன்றவை பாராட்டுக்குரியவை.

கல்வி, பெண்கள் முன்னேற்றம் மற்றும் தமிழ் வளர்ச்சி ஆகியவற்றை தனது முழு மூச்சாகக் கொண்டு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் செயல்பட்டு வருகிறார்.இப்போது தமிழ்நாட்டின் பொருளாதார முன்னேற்றத்திற்காக சிங்கப்பூர் வந்துள்ளார்.

நேற்று சிங்கப்பூர் தமிழ் அமைப்புகளின் சார்பில் நடைபெற்ற நிகழ்ச்சியில், சிங்கப்பூருக்கும் தமிழுக்கும் உள்ள நெருங்கிய தொடர்பு பற்றியும், சிங்கப்பூரில் தமிழ் வளர்ச்சிக்காக பாடுபட்டவர்களை பாராட்டியதும் எங்களுக்கு மகிழ்ச்சி அளிக்கிறது" என்று தெரிவித்தார்.

இச்சந்திப்பின் போது, தொழில்துறை அமைச்சர் டி.ஆர்.பி. ராஜா, தலைமைச் செயலாளர் வெ.இறையன்பு மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடன் இருந்தனர்.



புதுக்கோட்டை மாவட்ட ஆட்சியரகக் கூட்டரங்கில், அனைத்துத்துறை அலுவலர்களுடன் வளர்ச்சிப் பணிகள் குறித்து, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் நேற்று முன்தினம் (25.05.2023) ஆய்வு மேற்கொண்டார். உடன் சட்டம், நீதிமன்றங்கள், சிறைச்சாலை மற்றும் ஊழல் தடுப்பு சட்ட அமைச்சர் எஸ்.ரகுபதி கூட்டுறவுத் துறை அமைச்சர் கே.ஆர். பெரியகருப்பன், சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன், மாவட்ட ஆட்சித்தலைவர் ஐ.சா.மெர்சி ரம்யா, இராமநாதபுரம் பாராளுமன்ற உறுப்பினர் நவாஸ்கனி, மாவட்ட காவல் கண்காணிப்பாளர் வந்திதா பாண்டே, புதுக்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் டாக்டர்.வை.முத்துராஜா, கந்தர்வக்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் எம்.சின்னத்துரை, உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகள் மற்றும் அலுவலர்கள் உள்ளனர்.

### டி.ஹரிகிருஷ்ணன் தலைமை! ரிஷிவந்தியம் வடக்கு ஒன்றிய

# இளைஞர் அணி சார்பில் திராவிட மாடல் அரசின் ஈராண்டு சாதனை விளக்க தெருமுனைக் கூட்டம்!

## வசந்தம் க.கார்த்திகேயன் எம்.எல்.ஏ. - கரூர் முரளி - பொன்.கௌதமசிகாமணி எம்.பி. சிறப்புரை!

கள்ளக்குறிச்சி, மே. 27 -

கள்ளக்குறிச்சி தெற்கு மாவட்டம், ரிஷிவந்தியம் வடக்கு ஒன்றிய தி.மு.க. இளைஞர் அணி சார்பில் திராவிட மாடல் ஆட்சியின் 2 ஆண்டு சாதனை விளக்க மாபெரும் தெருமுனைக் கூட்டம் நாளை (28.5.2023 ஞாயிற்றுக்கிழமை) மாலை 6 மணி அளவில், சந்தைமேடு, அத்தியூரில் நடைபெறுகிறது.

ரிஷிவந்தியம் வடக்கு ஒன்றிய இளைஞர் அணி அமைப்பாளர் டி.ஹரிகிருஷ்ணன் தலைமை வகிக்கிறார்.

வடக்கு ஒன்றிய இளைஞர் அணி துணை அமைப்பாளர் ஆர்.பத்மநாபன் வரவேற்புரை ஆற்றுகிறார்.

க.செல்வம், ஏ.வி.செந்தில்குமார், கே.அன்பழகன், கே.ராஜேந்திரன், எம்.குமார், தனலட்சுமி கோவிந்தன், ஆர்.சதீஷ், எஸ்.மோகனாசெல்வம் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

இக்கூட்டத்தில் மாவட்டக் கழகச் செயலாளர் வசந்தம் க.கார்த்திகேயன் எம்.எல்.ஏ, கரூர் முரளி, கள்ளக்குறிச்சி நாடாளுமன்ற உறுப்பினர் கௌதமசிகாமணி ஆகியோர் சிறப்புரை ஆற்றுகின்றனர்.

இக்கூட்டத்தில் ரிஷிவந்தியம் வடக்கு ஒன்றியக் கழகச் செயலாளர் ஆர்.துரைமுருகன், தெற்கு ஒன்றிய செயலாளர் எம்.பெருமாள், கிழக்கு ஒன்றிய செயலாளர் ஆர்.பாரதிதாசன், வடிவுக்கரசி சாமிசுப்ரமணியன், சென்னம்மாள் அண்ணாதுரை, கே.அண்ணாதுரை, ஆதி.கு.கோவிந்தராஜ், எம்.ராஜேந்திரன், ஆர்.ராஜி, வி.பி.தாகப்பிள்ளை மற்றும் மாவட்டக் கழக அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள், ஒன்றிய கழக நிர்வாகிகள், கழக முன்னோடிகள் பலர் கலந்து கொண்டு சிறப்பிக்கின்றனர்.

ஒன்றிய இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் எஸ்.ராஜாராம், எம்.பி.நாகர்ஜுன் ஆகியோர் நன்றி உரை ஆற்றுகின்றனர்.



விழுப்புரம் வடக்கு மாவட்டம் மேல்மலையனூர் கிழக்கு ஒன்றிய தி.மு.க. இளைஞரணி சார்பில் அன்னமங்கலத்தில் நடைபெற்ற தி.மு.க. அரசின் இரண்டு ஆண்டு சாதனை விளக்க தெருமுனைப் பிரச்சார கூட்டத்தில் சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர்கள் நலத்துறை அமைச்சர் செஞ்சி மஸ்தான் சிறப்புரையாற்றினார். அருகில் தலைமைக் கழகப் பேச்சாளர் பொன்னேரி சிவா, ஒன்றிய பெருந்தலைவர் கண்மணி நெடுஞ்செழியன்,ஒன்றியச் செயலாளர் நெடுஞ்செழியன் உள்ளனர்.



பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி தலைமையில் நேற்று முதன்மை கல்வி அலுவலர்கள் இணைய வழிக் கூட்டம் நடைபெற்றது. அரசுப் பள்ளிகளில் மாணவர் சேர்க்கையை அதிகரிப்பது குறித்தும், பள்ளித் தூய்மை, விலையில்லாப் பொருட்களை உடனே வழங்குவது, தமிழ் கட்டாய பாடம் என்பதை தனியார் பள்ளிகள் பின்பற்றுகிறதா? என்பதை கண்காணிக்க வேண்டும், என்பன போன்ற கருத்துகளை இக்கூட்டத்தில் அமைச்சர் வலியுறுத்தினார்.

